

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் திட்டத்தினை கோயம்புத்தூரில் 09.08.2024 அன்று தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற விழா நிகழ்வில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.இனிகோ இருதயராஜ், செ.ஸ்டாலின்குமார், எம்.பழனியாண்டி, மாவட்ட ஊராட்சித்தலைவர் இராஜேந்திரன், மண்டல தலைவர் மதிவாணன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கங்காதாரிணி, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.விஜயலெட்சுமி, ஜமால் முகமது கல்லூரியின் தாளாளர் மற்றும் நிர்வாகிகள், பேராசிரியர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டம் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். ஜி.கார்த்திகேயன் வரவேற்புரையாற்றினார். கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், ப.அப்துல்மாலிக், எம்.ஆர்.கே.பி.கதிரவன், சுந்தரி ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டத்தில் இளைஞர் அணி - மகளிர் அணிகளுக்கு

# ஒரு லட்சம் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும்!

## காட்டுமன்னார்கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்: அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்!

கடலூர், ஆக.12 -

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டம், 10.08. 2024, காலை 10 மணியளவில், காட்டு மன்னார்கோயில் எம்.ஆர்.கே. பொறியியல் கல்லூரி அருகில் உள்ள கிருஷ்ணா திருமண மண்டபத்தில், கழக தேர்தல் பணிக் குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்தி கேயன் வரவேற்புரையாற்றினார்.

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., கழக பொறியாளர் அணி செயலாளர் துரை.கி. சரவணன், கழக இளைஞரணி துணை செயலாளர் ப. அப்துல்மாலிக், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர். கே.பி.கதிரவன், மேயர் சுந்தரி ராஜா, மகளிர் அணி த.அமுதாராணி, மகளிர் தொண்டரணி ப.மனோ ரஞ்சிதம், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளருமான எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அவர்கள் சிறப்புரை யாற்றினார்.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை சீரும் சிறப்புமாக மாவட்டம் முழுவதும் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களில் நலத்திட்ட உதவிகள் செய்து கொடியேற்றி கொண்டாடிட வேண்டும்.

கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் இனப்பகைவர்களை நடுங்க வைக்கும் இளைய சூரியன் பாசமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆக்கப்பூர்வமான ஆணைப்படி இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞரின் நூற்றாண்டு நிறைவு நிகழ்வின் முத்தாய்ப்பாக பேச்சுப்போட்டி நடத்திடுவது என்றும் அது தலைமை கழக பேச்சாளர்களின் முன்னிலையில் பேச்சுப் போட்டி நடத்திட மாவட்டத்தின் இளம் பேச்சாளர்களை தேர்வு செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கழகத்தின் ஆக்கப்பணிக்களாக தலைவர் அவர்கள் அன்புக்கட்டளையின்படி, மாண்புமிகு மாவட்ட கழக செயலாளர் அவர்களின் வழிக் காட்டுதலின் படி மாவட்டம் முழுவதும் 15 ம் தேதி முதல் 30ம் தேதி வரை 672 அனைத்து ஊராட்சி, வார்டு பகுதிகளிலும், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி வாரியாக

இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும். தலா ஒரு லட்சம் உறுப்பினர்கள் சேர்ப்பது என்று இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளர் பி.இராமலிங்கம் அவர்கள் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கல் இக்கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் துணை செயலாளர்கள் அ.ஞான முத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத், மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா,

ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, வி.சிவகுமார், தங்க.ஆனந்தன், கே. ஆர்.ராயர், தெ.காசிராஜன், பி.சுப்ரமணி யன், கே.ஆர்.தனஞ்செயன், எஸ். செந்தில்குமார், ஆர்.நாராயணசாமி, ஏ.எஸ்.மதியழகன், வி.ஜி.பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.கோவிந்த சாமி, த.சங்கர், நளன்புத்தூர் நடராஜன், வி.ஆர்.ராஜேந்திகுமார், எம்.சோழன், இர. விஜய சுந்திரம், பி.சுந்திர பாண்டியன், இரா.கலையரசன், வி.கோவிந்த சாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வ.ஞானசேகரன், விக்ரமன், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பால முருகன், த.ஜேம்ஸ் விஜயராக வன், வி.பி.பாலு, வி.பி. வெற்றிவேல், என்.டி. கணேசன், இர. மஞ்சு, வடலூர் நகர மன்ற தலைவர் சிவக்குமார், நகர கழக செய லாளர் த.தமிழ்ச்செல்வன், பேரூராட்சி தலைவ ர்கள் எஸ். கணேசமூர்த்தி, க.பழனி, கோகிலா குமார், பேரூர் கழக செயலாளர்கள் ப. மனோகரன், ஜெ. அன்வர் சதாத், பூ.செல்வகுமார், ஒன்றிய பெருந்தலைவர் கருணாநிதி, சகதியா பர்வீன்,

மாவட்டகழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஏ.எம்.மதியழகன், ஆர். ஜெகன், வி.மணிகண்டன், ஜி.முத்துகுமார், வி.ஜே.அன்பழகன், டி.பிரபு, மாநர கழக இளைஞரணி அமைப்பாளர் ஜெயமணி, துணை அமைப்பாளர் குப்புராஜ், ராமகுமார், கோபி, சரத், மாவட்ட பொறியாளர் அணி அப்புசந்திரசேகரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஜாபர்அலி, மாணவர் அணி ஆர்.சத்திய நாராயணன், தொண்டர் அணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.ராமசாமி, பொறியாளர் அணி அப்பு.சந்திரசேகர், வழக்கறிஞர் அணி பி. அருள்ஜோதி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு எம்.எஸ்.முகமது யுனூஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன், தகவல் தொழில் நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, சுற்றுச் சூழல் அணி ஆர். மணிவண்ணன், மகளிர் அணி தலைவர் லதா, லதா பாண்டியன், உள்ளிட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

### திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில்

# இளைஞர் அணி சார்பில் நூலகம்!

நெல்லை, ஆக.12 -

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுத்தலின்படி திருநெல்வேலி சட்டமன்ற தொகுதியில் பொதுமக்கள், மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நூலகம் மத்திய மாவட்ட இளைஞரணி, மாநகர இளைஞரணி சார்பில் நெல்லை டவுண் மாநகர கழக அலுவலகம் அருகில் கலைஞர் நூலகம் அமைக்கப்பட்டு கடந்த 03.08. 2024 அன்று அதற்கான துவக்க விழா நிகழ்வு நடைபெற்றது.

நூலகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.நெல்லை மாநகர கழக நிர்வாகிகள் பல்வேறு தரப்பட்ட புத்தகங்களை கலைஞர் நூலகத்திற்கு வழங்கி வருகின்றனர்.

அதனை தொடர்ந்து நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் கோபி தலைமையில்,மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அலிஃப் மீரான்,இனியன் ஆகியோர் முன்னிலையில் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூலகத்தில் வைத்து பேராசிரியர் நீலகிருஷ்ணபாபு நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியனிடம் தந்தை பெரியார்,பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் புத்த கங்கள், முதலமைச்சர் கழக தலைவர் அன்பு தளபதியாரின் உங்களில் ஒருவன் புத்தகங்கள்,மகாத்மா காந்தியின் சுய சரிதை, பெரியாரும் சமதர்மமும், பொது அறிவு புத்தகங்கள், முரசொலி மாறன் அவர்களின் திராவிட இயக்க வரலாறு நூல்கள், சமூக நீதி சிந்தனைகள், தமிழ் இலக்கிய வரலாறுகள், மாநில சுயாட்சி பற்றிய புத்தகங்கள் என பல்வேறு தரப்பட்ட 300 புத்தகங்களை வழங்கினார்.

நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ்,வட்ட செயலாளர் கேபிள் குமரேசன்,மாநகர பிரதிநிதி சிவா,மாநகர விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஷெட்டி, மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் மகாராஜன், மாநகர வழக்கறிஞரணி துணை அமைப்பாளர் சண்முகசுந்தர், 15வது வட்ட பிரதிநிதிகள் அந்தோணி, மணிகண்டன்,சேர்மன் துரை,கழக நிர்வாகிகள் வழக்கறிஞர்பிரேம்,ஆவின் ராஜ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.


